**2.2.2023**

**OS 457/2019**

**வா.சா.1 பெருமாள்**

**குறுக்கு விசாரணை:-**

தாவா சொத்தின் சர்வே எண்.269/1 ஆகும். மொத்த விஸ்தீரணம் 9-3/4 செண்ட் ஆகும். நான் இந்த வழக்கை 4செண்டிற்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 4 செண்டிற்கு நான்குமால் தற்போது எனக்கு சரியாக தெரியவில்லை. தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் ஆறுமுகத்திடம் இருந்து நான் வாங்கியுள்ளேன். நான் 2016ம் ஆண்டு கிரையம் வாங்கினேன். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. அண்ணன் எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார். கிரையம் வாங்கவில்லை. தானசெட்டில்மெண்ட் பத்திரம் வா.சா.ஆ.3-ல் பத்திரத்தில் கண்ட சொத்தில் வீடு ஏதும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது காலிமனையிடமாகத்தான் வாங்கப்பட்டுள்ளது. சுந்தரி, ஆறுமுகத்திற்கு எழுதிக்கொடுத்ததும் தானசெட்டில்மெண்ட் பத்திரம்தான். சுந்தரி எனது தங்கை. சுந்தரி கிரையம் வாங்கியது 1,872 சதுர அடி வாங்கினார். அதே சுந்தரி, ஆறுமுகத்திற்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் 2,172 சதுரடி எழுதிக்கொடுத்துள்ளார். 1,872 சதுர அடி கிரையம் வாங்கி கொண்டு எவ்வாறு 2,172 சதுரடி எழுதிக்கொடுத்தார் என்றால் மீத 320 சதுரடி எனது அப்பா தர்மலிங்கத்தின் சொத்தாகும். வழக்கில் கட்டுப்பட்ட சொத்தில் ஒரு ஓட்டுவீடும், ஒரு ஆஸ்பெஸ்டாஸ் வீடும் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதின் கதவு எண்.187/1. கதவு எண்.187/1 மற்றும் 188/1 ஆகிய இரண்டு வீட்டு வரி ரசீதுகளும் செல்லமீனா பெயரில் உள்ளது என்றால் ஒரு ரசீது என் பெயரில் உள்ளது. 1ம் பிரதிவாதி, 2வது பிரதிவாதிக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எத்தனை விஸ்தீரணத்திற்கு எழுதி வைத்துள்ளார் என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.1 சாட்சியிடம் காண்பித்து கேட்கப்பட்டபோது, 1,617 சதுரடி எழுதிக்கொடுத்துள்ளார். அந்த இடத்திற்கு நான்குமாலாக வடக்கே தர்மலிங்கம் வீடு, மேற்கே-ஞானம் வீடு, தெற்கு-முத்தடைக்ககோன் காலியிடம் மற்றும் பொன்மணி வீடும், கிழக்கு-நடைபாதையும் என கண்டுள்ளது. தர்மலிங்கம் 04.07.1996ம் தேதி வாங்கிய கிரைய பத்திரத்தில் கண்ட 1,840 சதுரடி சொத்தைத்தான் 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தின் அடிப்படையில் 2ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால்அதை நான் மறுக்கிறேன். 04.07.1996ம் பத்திரத்தை நான் ஒத்துக்கொள்கிறேன். செட்டில்மெண்ட் பத்திரத்தை தான் நான் மறுக்கிறேன். மேற்படி செண்ட்டில்மெண்ட் எழுதி வைத்ததுபோக மீத விஸ்தீரணமான 220 சதுரடியை அவருடைய மனைவி ரேணுகாதேவிக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி

வைத்துள்ளார் என்றால் அதை நான் மறுக்கிறேன். மூவேந்திரன், ரேணுகாதேவிக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் வா.சா.ஆ.7 ஆவணம் என்றால் சரிதான், அதை நான் மறுக்கிறேன். அதன் நான்குமால் வடக்கு-என் வீடு(மூவேந்திரன்), கிழக்கு-நடைபாதை, தெற்கு-சுந்தரி, பொன்மணி இவர்களது வீடு, மேற்கு-ஞானம் செட்டியார் வீடு. இந்த நான்மாலுக்குட்பட்ட 220 சதுரடியைத்தான் ரேணுகாதேவி எழுதி வைத்துள்ளார். அந்த 220 சதுரடியை செல்லமீனா மீண்டும் ரேணுகாதேவிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதை நான் மறுக்கிறேன். அது வா.சா.ஆ.4 என்றால் சரிதான். தாவா சொத்து நத்தம் காலிமனையிடம் என்றால் சரிதான். என் சொத்து என்று சொல்வதற்காக நான் பட்டா வாங்கியுள்ளேன் என்றால் நான் வாங்கவில்லை. வேறு யாரும் வாங்கவில்லை. மூவேந்திரன் வாங்கியுள்ளார் என்றால் என் அப்பா இருக்கும்போது வாங்கியுள்ளார். நான் வாங்கியுள்ள சொத்தும், பிரதிவாதிகள் வாங்கியுள்ள சொத்தும் வெவ்வேறானவை என்றும், அதை நான் மறைத்து பிரதிவாதி சொத்துதான் எனது சொத்து என்று வழக்காடியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் செல்லமீனா சென்ட்டிரிங் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் ஆஸ்பெட்டாஸ் வீட்டை இடித்து சென்ட்டிரிங் வீடு கட்டி குடியிருந்து வருகிறார். அதை நான் மறுக்கிறேன். பிரதிவாதிகளின் ஆவணங்கள் போலியானவை என்று நான் குற்றப்பிரிவில் புகார் கொடுத்தேன், அதன் நிலை என்னவெனில் அது நிலுவையில் உள்ளது. அதன்பேரில் பிரதிவாதிகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும், பத்திரபதிவு துறையில் பத்திரத்தை ரத்து செய்ய கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு நீதிமன்றத்தில் மேற்படி பத்திரத்தை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்த பின்னிட்டுதான் பத்திரபதிவு துறையில் பத்திரத்தை ரத்து செய்ய கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்திலும், மேற்படி பத்திரத்தை ரத்து செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் பத்திர பதிவு துறையிலும் பத்திரத்தை ரத்து செய்ய கோரி மனு தாக்கல் செய்துள்ள நிலையில் இரு இடத்தில் ஒரே பரிகாரம்கோரி தாக்கல் செய்துள்ள நிலையில் என்னுடைய வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தை நாடி வந்துள்ளேன். பிரதிவாதிகள் மிகுந்த ஏழை என்பதால் அவர்களை மிரட்டி சொத்தை அபரிக்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.